**மருத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம்**

**கொழும்புப் பல்கலைக்கழகம்**

# வெற்றிடங்கள்

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனத்தில் நிலவும் பின்வரும் பதவிகளுக்காக தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள தனிப்பட்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதற்கான விண்ணப்பங்களை ஒன்றில் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் / நிறுவனங்கள் மற்றும் பொது நிர்வாகம், மருத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம், இல. 160, பேராசிரியர் நந்ததாச கோதாகொட மாவத்தை, கொழும்பு 07 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது recruitment@pgim.cmb.ac.lk மின்னஞ்சல் மூலம் 2025-01-20ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கச் செய்தல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் அல்லது மின்னஞ்சல் விடய வரியில் விண்ணப்பிக்கும் பதவி தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளதா என உறுதிப்படுத்திக்கொள்ளவும்.

விண்ணப்பப் படிவங்கள் மற்றும் மேலதிக தகவல்களை மருத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனத்தின் இணையதளத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம். (https://pgim.cmb.ac.lk). பரிந்துரைக்கப்பட்ட வடிவத்தில் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே கவனத்திற் கொள்ளப்படும்.

முழுமையற்ற விண்ணப்பங்கள் அல்லது தகுதி மற்றும் அனுபவத்தை சரிபார்க்கும் சான்றிதழ்களின் பிரதிகள் உட்பட தேவையான விபரங்கள் இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தாமதமான சமர்ப்பிப்புகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் மீள் பரிசீலனை செய்யப்படமாட்டாது.

## 01. தொழில்நுட்ப அதிகாரி தரம் II Seg. "A" (ஆய்வுகூடம்) - 02 பதவிகள்
**Technical Officer (Laboratory)**

**தகைமைகள்:**

I. மருத்துவ ஆய்வுகூட உயர் தேசிய டிப்ளோமா

**அல்லது**

II. மருத்துவ ஆய்வுகூட தேசிய டிப்ளோமா

**அல்லது**

III. மருத்துவ ஆய்வுகூடத்தில் ஒரு (01) வருட கால அனுபவம் சகிதம் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் பெற்றுக்கொண்ட குறைந்தபட்சம் இரண்டு (02) வருட கால முழு நேர மருத்துவ ஆய்வுகூட டிப்ளோமா

**கவனிக்கவும்:**

- பின்வரும் தகைமைகள் மற்றும் /அனுபவத்தைக் கொண்ட அபேட்சகர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
  - ➢ அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் ஒரு வருடகால அனுபவம் சகிதம் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானத்தில் (MLS) டிப்ளோமா
  - ➢ மருத்துவ நுண்ணுயிரியலில் நுண்ணுயிரியல்/MSc. இல் 2 வருடகால அனுபவம் மற்றும் SLMC பதிவுடன் மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானத்தில் டிப்ளோமா
  - ➢ அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் நுண்ணுயிரியலில் இரண்டு வருட கால அனுபவத்துடன் மருத்துவ / சிகிச்சை நுண்ணுயிரியலில் (Medical/Clinical Microbiology) BSc பட்டம்.

**வயது** : 45 வயதிற்குக் குறைவாகவிருத்தல்

**தெரிவுசெய்தல்**: எழுத்து மூலப் பரீட்சை, செயன்முறைப் பரீட்சை மற்றும் நேர்முகத் தேர்வின் மூலம்.

**சம்பளம்** : 01.01.2020 [U MT I (II)] பிரகாரம் மாதாந்தம் ரூபா 35,145 - 7x355; 9x495 - 42,085.00

## 02. தொழில்நுட்ப அதிகாரி (பொறிமுறை) (தரம் III) - 01 பதவி
**Technical Officer (Mechanical)**

**தகைமைகள்:**

I. க.பொ.த (உ/த) பரீட்சையில் பௌதீகவியல் பாடப்பரப்பில் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**மற்றும்**

II. மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப/ தொழிற் பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்பட்ட NVQ 5 நிலைக்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் பொறிமுறை பொறியியல் துறை /அல்லது அதற்குச் சமமான தகைமை.

**அல்லது**

III. அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் கட்புல செவிப்புல வேலைகளில் ஒரு வருட கால அனுபவத்துடன் மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் மேற்கூறிய (II) (அ) தகைமைகளை ஏற்றுக்கொள்ளக்கூடிய தொலைத்தொடர்பாடல் / இலத்திரனியல் அல்லது கட்புல செவிப்புல நுட்பத் துறையில் தொழில்நுட்பத் தகைமையைப் பெற்றிருத்தல்.

**வயது** : 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

**தெரிவுசெய்தல்**: எழுத்து மூலப் பரீட்சை, செயன்முறைப் பரீட்சை மற்றும் நேர்முகத் தேர்வின் மூலம்.

**சம்பளம்** : 01.01.2020 [U MT I (III)] பிரகாரம் மாதாந்தம் ரூபா 31,625- 7x300; 10x355 - 37,275.00

## 03. தொழில்நுட்ப அதிகாரி (ICT) (தரம் III) - 01 பதவி
**Technical Officer (ICT)**

**தகைமைகள்:**

I. க.பொ.த (உ/த) பரீட்சையில் ஏதாவது பாடப்பரப்பில் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**மற்றும்**

II. மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப/ தொழிற் பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்பட்ட NVQ 5 நிலைக்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் தகவல் தொலைத்தொடர்பு மற்றும் பல்லூடக தொழில்நுட்பவியல் / தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்பவியல் துறை /அல்லது அதற்குச் சமமான தகைமை.

✷ ICT வேலை அனுபவத்தைக் கொண்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**வயது** : 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

**தெரிவுசெய்தல்**: எழுத்து மூலப் பரீட்சை, செயன்முறைப் பரீட்சை மற்றும் நேர்முகத் தேர்வின் மூலம்.

**சம்பளம்** : 01.01.2020 [U MT I (III)] பிரகாரம் மாதாந்தம் ரூபா 31,625- 7x300; 10x355 - 37,275.00

## 04. முகாமைத்துவ உதவியாளர் தரம் III (களஞ்சியக் காப்பாளர்) (06 பதவிகள்)
**Management Assistant (Store Keeping)**

**தகைமைகள்:**

I. க.பொ.த. (சா/த) பரீட்சையில் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் என்பதுடன் பின்வரும் பாடங்களில் திறமைச் சித்தியைப் பெற்றிருத்தல்.

i சிங்கள மொழி / தமிழ் மொழி

ii ஆங்கில மொழி / ஆங்கில இலக்கியம்

iii கணிதம்

**மற்றும்**

II. க.பொ.த (உ/த) பரீட்சையில் ஒரே அமர்வில் சகல பாடங்களிலும் (சாதாரண பொது வினாத்தாள் தவிர) சித்தியடைந்திருத்தல்.

**பின்வருவனவற்றில் சித்தியடைந்துள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.**

அ) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொண்ட ஆறு (06) மாத காலத்திற்குக் குறையாத கணனி பிரயோகத்தில் (Computer applications) ஏற்றுக்கொள்ளக்கூடிய சான்றிதழ்.

**மற்றும்**

இ) computer application packages பயன்படுத்துவதில் இரண்டு வருட கால அனுபவம்.

**பதவிக்கான குறிப்பிடத்தக்க தகைமைகள்:**

- களஞ்சியக் காப்பாளராக ஒரு வருட கால அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் மற்றும் / அல்லது க.பொ.த. (சா/த) பரீட்சையில் வர்த்தக பாடங்களில் சித்தியடைந்திருத்தல் அல்லது க.பொ.த. (உ/த) பரீட்சையில் கணக்கியல் பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

**குறிப்பு:**

- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு / உயர் கல்வி நிறுவனத்தினால் தீர்மானிக்கப்பட்டதன் பிரகாரம் காசுப் பிணை / பிணை வைப்பொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**வயது** : விண்ணப்பங்கள் முடிவுறுத்தப்படும் நாளில் 18 வயதிற்குக் குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பளம்** : 01.01.2020 [U MN I (III)] பிரகாரம் மாதாந்தம் ரூபா 30,725 - 17x300 - 35,825.00

**தெரிவுசெய்தல்:** எழுத்து மூலப் பரீட்சை, செயன்முறைப் பரீட்சை மற்றும் நேர்முகத் தேர்வின் மூலம்.

**கவனிக்கவும்** : இலங்கைப் பிரஜைகளாகவிருத்தல் வேண்டும்.
சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

## 05. மேற்பார்வையாளர் (பராமரிப்பு) தரம் III - 01 பதவி
**Supervisor (Maintenance)**

**தகைமைகள்:**

I. க.பொ.த. (சா/த) பரீட்சையில் சிங்களம் / தமிழ் / ஆங்கில மொழி அல்லது இலக்கியம் மற்றும் எண்கணிதம் / வர்த்தக எண்கணிதம் / கணிதம் எனும் பாடங்களில் திறமைச் சித்தியுடன் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

II. தொழிலாளர் மேற்பார்வையில் குறைந்தபட்சம் 3 வருடகால அனுபவம்.

**வயது** : 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பளம்** : 01.01.2020 [U MN I (III)] பிரகாரம் மாதாந்தம் ரூபா 30,725 - 17x300 - 35,825.00

**தெரிவுசெய்தல்**: எழுத்து மூலப் பரீட்சை, செயன்முறைப் பரீட்சை மற்றும் நேர்முகத் தேர்வின் மூலம்.

**பணிப்பாளர்,**
**பட்டப் பின்படிப்பு நிறுவனம்,**
**இல. 160, பேராசிரியர் நந்ததாச கோதாகொட மாவத்தை,**
**கொழும்பு-07.**

2025-01-02.